பக்கங்கள் 6 விலை சதம் 40 ★★

# ஈழநாடு

THE EELA NADU

மலர்: 19 ஆடி 12 ஷஃபான் 10 இதழ்: 166
யாழ்ப்பாணம் புதன்கிழமை 27 7 77

## கட்டுநாயக்காவில் சுங்க கட்டுப்பாடு நீக்கம்!

### திருமலைக்கு பின்னர் விஸ்தரிப்பு

கொழும்பு, செவ்வாய்

சுங்கக்கட்டுப்பாடற்ற வர்த்தக வலயம் முதலில் கட்டுநாயக்க விமான நிலைய பிரதேசத்தில் நடைமுறைக்கு கொண்டுவரப்படும். பின்னர் இது திருகோணமலைப் பகுதியிலும் செயல்படுத்தப்படும்.

இத்தகவலை நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல் இன்று தெரிவித்தார்.

இத் திட்டத்தால் 50 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று அமைச்சர் சொன்னார்.

அரசு துறைக்கும் தனியார் [5-ம் பக்கம் பார்க்க]

# எதிர்க்கட்சித் தலைவர் 'அமிர்' அதில்மாற்றத்துக்குஇடமில்லை

## நல்லூர் 'சிவா' கூறுகிறார்



யாழ்ப்பாணம், புதன்

எதிர்க்கட்சித் தலைவராக, காங்கேசன்துறை தேசிய அரசுப்பேரவை உறுப்பினரும், தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலதிபர்களில் ஒருவருமான திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவுசெய்யப்படுவார்.

இந்தத் தெரிவில், எவ்வித மாற்றமோ அல்லது தடுமாற்றமோ இருக்காது என்று கூட்டணிவட்டாரங்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வவுனியாவில் கூடுகின்றனர். தேசிய அரசுப் பேரவையில் யார் எதிர்க்கட்சித் தலைவராக இயங்குவது என்பது குறித்தும் பிரதம கொறடாவாக யாரை நியமிப்பது என்பது பற்றியும் இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்படும் தமிழர் விடுதலைக் கூட்டணியே எதிர்க்கட்சிகளின் பலம்பெற்றிருப்பதால், அன்றைய கூட்டத்தில் தேசிய அரசுப் பேரவைக் குழுத் தலைவராகத் தெரிவுசெய்யப்படுபவரே தேசிய அரசுப் பேரவையில் பலம்வாய்ந்த எதிர்க்கட்சித் தலைவராக விளங்குவார் என்பது குறிப்பிடத்தக்கது.

### தொலைபேசிக் கட்டணம் குறையும்

கொழும்பு, செவ்.

தொலைபேசிக் கட்டணங்கள் குறைக்கப்படும் என்று தபால் தந்தி அமைச்சர் திரு. ஷெல்டன் ஜெயசிங்கா தெரிவித்தார்.

தொலைபேசிக் கட்டணங்களை குறைப்பது பற்றி அமைச்சர் இப்போது ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (இ)

கடந்தகாலத்தில் நடந்த

### அரசியல் பழிவாங்கல்; உடன் விசாரிக்க ஏற்பாடு

கொழும்பு செவ்.

அரசாங்க ஊழியர்களின் அரசியல் இடமாற்றம், பழிவாங்கல் நடவடிக்கை ஆகியன பற்றி உடனடியாக விசாரணை செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படும்.

இவ்வாறு பொது நிர்வாக உள்நாட்டு பிரதி அமைச்சர் திரு. பேர்ஸி சமரவீர கூறினார்.

தமது அமைச்சில் கடமைகளைப் பொறுப்பேற்ற பிரதி அமைச்சர் ஊழியர்களிடையே உரையாற்றினார்.

அரசியல் இடமாற்றம், பழிவாங்கல் ஆகிய நடவடிக்கைகள் குறித்து விசாரணை செய்யும் பொறுப்பை பொதுநிர்வாக உள்நாட்டு அமைச்சர் திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமதம்மிடம் ஒப்படைத்துள்ளதாகவும் இதுபற்றி விரைவில் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் திரு. சமரவீர கூறினார்.

### திரைநீக்கம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நேற்று இலங்கை பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் உருவப்படத்தை அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. ஏ. எல். விஜயபாலா திரைநீக்கம் செய்துவைத்தார். (க)

## தேசிய சபை அமைக்கப்படும்



நல்லூர்த் தொகுதியிலிருந்து அதிகப் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட கூட்டணிச் செயலதிபர்களில் ஒருவரான திரு. மு. சிவசிதம்பரத்துக்கு கோண்டாவிலில் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது.

திரு. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய திரு. மு. சிவசிதம்பரம், உத்தேச தேசியசபைபற்றியும், எதிர்க்கட்சித் தலைவர் நியமனம்பற்றியும் தெரிவித்தார்.

"தேசிய அரசுப் பேரவையில், எதிர்க் கட்சியாக அமரும் சந்தர்ப்பம் எமக்கு இப்போது கிடைத்திருக்கிறது. இதனை நல்ல முறையில் நாம் பயன்படுத்துவோம்" என்று கூறிய திரு. மு. சிவசிதம்பரம் மேலும் தெரிவித்ததாவது:

"எதிர்க்கட்சித் தலைவராக திரு. அமிர்தலிங்கமே ஏகமனதாகத் தெரிவு செய்யப்படுவார் என்பதில் சந்தேகம் இல்லை, இதில் எந்த வித மாற்றமும் இருக்காது. தமிழ் ஈழ இலட்சியத்தை முன்வைத்து, சர்வஜன வாக்கெடுப்பை நடத்திய நாம், பெருவெற்றி ஈட்டி, தமிழ் மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தி இன்று, ஆட்சி மன்றத்திலேயே எதிர்க்கட்சியாக வரும் நிலைக்கு உயர்ந்துள்

(2-ம் பக்கம் பார்க்க)

## சீராக உணவுப்பொருள் விநியோகம்; பிரதமர் வலியுறுத்து



கொழும்பு, செவ்

பொதுமக்களுக்கு உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்படும் நிலையங்களில் இருந்து வரும் தடங்கல் உடனே நீக்கப்பட்டு உணவுப் பொருட்கள் சீராகக் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என பிரதம மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன வற்புறுத்தியிருக்கிறார்.

உணவு அமைச்சரோடும், உணவு கூட்டுறவு அதிகாரிகளோடும் நடத்திய பேச்சுவார்த்தையின்போது பிரதமர் இதனை வற்புறுத்தினார்.

உணவு விநியோக முறை சீரமைக்கப்படவேண்டுமென்றும் சில முக்கிய பொருட்கள் மக்களுக்கு அவசியமானபோது கிடைக்கிறதில்லையென்றும் பிரதமர் சொன்னார்.

கூட்டுறவுச் சபைகளில் அரசியல்அடிப்படையில் நியமனம் பெற்ற நெறியாளர்களை நிறுத்திவிட்டு தற்காலிகமாகப் புதிய நெறியாளர் சபைகளை நிறுவும்படி அமைச்சு உத்தரவிட்டுள்ளது. இந்தத் தற்காலிக நெறியாளர் சபைகளில் உதவி அரசாங்க அதிபர்களும் அங்கம் வகிப்பார்கள்.

கூட்டுறவு சபைகளில் அரசியல் நியமனங்கள் காரணமாக பெரும் ஊழல்கள் இடம்பெற நேர்ந்துள்ளது என அமைச்சு கருதுகிறது.

## புலவர் கோவிந்தன்கைது!

சென்னை, ஜூலை 26

தமிழ்நாடு சட்டப்பேரவையின் முன்னைநாள் சபாநாயகர் புலவர் கோவிந்தன் இன்று கைதுசெய்யப்பட்டார்.

திரு. கருணாநிதி தலைமையிலான தி. மு. கழக அரசு பதவியிலிருந்தகாலத்தில் புலவர் கோவிந்தன் சட்டப்பேரவையின் சபாநாயகராக இருந்தார்.

இவர்மீது சில குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதாகவும் இக்குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக மத்திய புலனாய்வுத்துறையினர் நடத்தியவிசாரணைகளின் பின்னர் அவர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிகின்றது.

கைது செய்யப்பட்டதின் பின்னர் புலவர் கோவிந்தன் சென்னை மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்,

(6-ம்பக்கம் பார்க்க)

மணிவாசகம்

ஓர் இலட்சியத்தை மேற்கொண்டு செய்யப்படாத தொழிலானது துறைநோக்கிச் செல்லாத அல்லது திசைப்படுத்தப்படாத கப்பல்போல் பயன் கொடுப்பதில்லை.

— காந்திமகான்

ஈழநாடு
THE EELANAADU

# வெற்றி தோல்வி

கல்வி நிலையங்களில்விளையாட்டுப்போட்டிகள் ஆண்டுதோறும் நடைபெறுவது வழக்கம்.

விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலும் இப்படியான போட்டிகள் நடைபெறும்.

இந்தப் போட்டிகளில் பிரதம விருந்தினர்களாக அமைச்சர்கள் ஆட்சி மன்ற உறுப்பினர்கள் என்று அரசியல் தலைவர்கள், அரசியல்வாதிகள் அழைக்கப்படுவார்கள்.

இவர்கள் இந்தப்போட்டிகளில்கலந்துகொண்டு, விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியும் தோல்வியும் சகஜம். இதுபோல்தான் வாழ்க்கையிலும் வெற்றி தோல்விகளைச் சமமாகக் கருதிச் சகித்துக்கொள்ள வேண்டும்'' என்றுஉபதேசம் செய்வதும் வழக்கம்.

ஆனல் இப்படி மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் உபதேசம் செய்யும் அரசியல்வாதிகள் தேர்தலில் தோல்விகண்டதும்தம்மைத் தேற்றிக்கொள்வது பெரும் கஷ்டம்.

தேர்தலில் தோல்வியடையும் ஒரு வேட்பாளர்வெற்றி பெறும் வேட்பாளருடன் கைகுலுக்கிக்கொண்டு சந்தோஷமாக வெற்றிபெற்றுச் சென்றுவிடுவாராயினும் அவருக்கு மனஅடிப்பு இருக்கத்தான் செய்யும் என்பது வேறுவிஷயம். என்றாலும் அவர் ஓரளவுக்குத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வார் அல்லது அதற்கு முயற்சிசெய்வார் என்று சொல்லலாம்.

ஆனல் நேர்தல் பிரசாரச் சமயத்தில் உருவேற்றிவிடப்பட்டவர்கள் வெற்றியையும் தோல்வியையும் சமமாகக் கணிக்கும் மனப்பக்குவம் பெற்றவர்களாக இருப்பார்களென்று எதிர்பார்க்க முடியாது.

இதன்விளைவைச் சென்ற பொதுத்தேர்தல் முடிந்தபோதும் இப்போது தேர்தல் முடிந்தபின்னரும் நடந்துள்ள வன்முறைச் சம்பவங்கள் இதற்கு எடுத்துக்காட்டு

இம்முறை தேர்தல் முடிந்தவுடன் பல இடங்களில் வன்முறைச் செயல்கள் தலைதூக்கின. சில இடங்களில் உயிர்ப்பலியும் சொத்துக்களுக்குச் சேதமும் ஏற்பட்டன.

ஆனலும் ஆட்சிபீடத்துக்கு வந்த அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தாமலே அந்தந்தப் பகுதிகளில் ஊரடங்கு உத்தரவை அமுலுக்குக் கொண்டுவந்து, உடனடியாகவே நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததற்காகப் பாராட்டவேண்டும்.

இதேசமயம் புதிதாகப் பதவியேற்ற அமைச்சர்கள் கடந்தகால அனுபவங்களைக் கொண்டு முன்னெச்சரிக்கையாக எந்தவொரு திணைக்களத்திலும், எந்தப் படங்களையும் நீக்கக்கூடாதென்றும், அவசரப்பட்டு வெற்றிவிழாக் கொண்டாடக்கூடாதென்றும் கூறியிருப்பது வரவேற்கத்தக்கது.

இதேசமயம் ஆட்சிமாற்றம் ஏற்படும்போது மக்கள் மத்தியில் உற்சாகம் கரைபுரண்டோடுவதும், பின்னர் அதே உற்சாகம் கசப்பாக மாறுவதும் கடந்தகால அனுபவங்களிலிருந்து நன்கு அறிந்துகொள்ளலாம்.

நாட்டின் பிரச்சினையை இந்த அரசாங்கம் தீர்க்காவிட்டால் இனி எந்த அரசாங்கத்தினலும் தீர்க்கமுடியாதென்று புதிய நீர்ப்பாசன, மின்சக்தி, நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு காமினி திஸநாயகா கூறியிருக்கிறர்.

எது எப்படியிருந்தாலும் புதிய பிரதமர் எடுத்துவரும் நடவடிக்கைகள், புதிய உற்சாக அலைகளில் சிக்கி விணைகமாட்டாதென்றும், உரிய பயனை விரைவில் மக்கள் அனுபவிக்கமுடியுமென்றும் நிச்சயம் நம்பலாம்.

# இந்தக் காணிகளின் தெரிவு ரத்தாகும்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணப் பகுதிகளில், வழங்கப்பட்ட காணிகளில், மக்கள் திருத்தம் செய்து குடியிருக்காததினல், அக் காணிகளின் தெரிவு ரத்து செய்து, காணியற்றவர்களுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது

மாவட்ட காணி உத்தியோகத்தர் திரு.கே.ரி. சப்பந்தர் மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

திரு. சப்பந்தர் மேலும் கூறியதாவது: யாழ்ப்பாணப் பகுதியில், திருநெல்வேலி, கொழும்புத்துறை அரியாலை, நாவற்குழி ஆகிய இடங்களில் பலருக்கு காணிகள் வழங்கப்பட்டது. இவர்களில் மிகச் சிலரே காணிகளைத் திருத்தி அங்கு குடியேறியுள்ளனர். ஆனல், பெரும்பாலானேர், காணிகளை திருத்தம் செய்யவுமில்லை, குடியேறவுமில்லை.

இதனல் இக் காணிகளின் தெரிவை ரத்துச்செய்து, காணியற்றவர்களுக்கு வழங்கத் திர்மாணிக்கப்பட்டுள்ளது.

இக்காணிகள் பல மாதங்களாக திருத்தம் செய்யப்படாமலிருக்கிறது. இக் காணிகளை திருத்தம் செய்ய அக்கறை எடுக்கப்படவில்லை.

இக் காணிகளில் வீடுகள், கிணறுகள் கட்டுவதற்கும், அரசு பண உதவி அளிக்கவும் தீர்மானித்திருந்தது. அப்படியிருந்தும், பெரும் பாலானேர், இக்காணிகளில் குடியேறவில்லை. இதனல் இக் காணிகள், காணியற்றவர்களுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (க)

# 6-வது ஆண்டு இசைவிழா

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் ஆறுவது ஆண்டு இசைவிழா, இம்மாதம் 31ந் திகதி முதல் அடுத்த மாதம் 9த் திகதிவரை யாழ். திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் தொடர்ந்து பத்துநாட்கள் வரை நடைபெறும்.

இவ்விழாவில் வளரும் கலைஞர்களும் முதுபெரும் கலைஞர்களும் கலந்துகொண்டு நிகழ்ச்சிகளை அளிக்கவிருக்கிறர்கள். இவ்விழாவையொட்டி நடாத்தப்பட்ட இசைப்போட்டியில் பரிசுபெற்றவர்களுக்கு 12 தங்கப் பதக்கங்கள் உட்பட வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்படவுள்ளது.

இவ்விழாவையொட்டி சிறப்பு மலரை யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் க. கைலாசபதி வெளியிட்டு வைப்பார். (கு)

# யாழ். ரோட்டரி சங்கப் பொருட்காட்சி 30-ல் ஆரம்பம்

நல்லூர், செவ்

யாழ் ரோட்டரிச்சங்கத்தின் கார்ணிவலும், பொருட்காட்சியும் இம்மாதம் 30-ம் திகதி சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவிருக்கின்றது. முதல்நாள் 'ஆசிரியர் இரவு' யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. டபிள்யு ஏ. எல். விஜயபாலாவினலும், யாழ். மறை ஆயர் அதிவண. கலாநிதி தியோகுப்பிள்ளையினலும் திறந்துவைக்கப்படும். இதைத் தொடர்ந்து முறையே ஒவ்வொருநாளும் அடுத்த மாதம் 10ம் திகதிவரை வெவ்வேறு பிரமுகர்கள் இக் கார்ணிவல் பொருட்காட்சியைத் திறந்துவைப்பர்.

திரு. முனிகுண்டன்மால், திரு. ஜஸ்டின் பெர்னண்டோ, திரு. ஈ சண்முகம், திருமதி யோகம்மா மாணிக்கம், திரு டொனல்ட் விஜயவர்த்தன, திரு. எஸ். சின்னத்துரை. திரு ஆர். வி ஏகனயக்கா, ஜனப் அபாஸ் எம். அக்பர்அலி. திரு. திரு. ஏ. ஆர். குணதிலக்கா' திரு எஸ். ராஜரத்தினம், திரு. எஸ். தியாகராசா, திரு. எம். ஜி. வின்சஸ்லோஸ் ஆகியோர் முறையே திறந்துவைப்பர்.

இலவசமாகவும் பல காட்சிகள் இடம்பெறும். முறையே பத்துவயதிற்குட்பட்ட மாணவர்களுடைய விசித்திரமான தவில், பொப் இசை, மூன்று வாத்தியங்கள் ஒரே சமயத்தில் வாசித்தல், லிம்போ நடனம், கராட்டி விளையாட்டு, மக்கள் வங்கி அளிக்கும் ஸ்பைரோ அன்ட் செலிஞக் காட்சி, கிழக்கு மேற்கு காட்சிபோன்ற பலவித நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

சிறுவர் முதல் பெரியோர் வரை கண்டுகளிக்கக்கூடிய ரங்கராட்டினம், ராட்சதவட்டம், 30 அடிக்கிணற்றில் அதிபயங்கர காரோட்டம், குள்ளர்கள் காட்சி, ரஷ்யமாயை, மகா அக்பருடைய மாயாஜால வித்தை, பிரமாண்டமான பசிபியா சர்க்கஸ், மின்ஒளியில் சரபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், 'மிஸ்டர்' யாழ்ப்பாணம் (கனிஷ்ட. சிரேஷ்ட போட்டி) ''காணிவல் ராணிப்'' போட்டி முதலிய பல்வேறு நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

விவசாயம், கைத்தொழில் நுட்பம், இலங்கையின் சமூக அபிவிருத்தி ஆகியவற்றை விளக்கும் பொருட்காட்சியும் இடம்பெறும். இந்தக்காட்சிகளையும் இலவசமாகக் கண்டு களிக்கலாம்.

இக்கார்ணிவலும் பொருட்காட்சியும் யாழ். ரோட்டரிச் சங்கத்தால் சமூக சேவை நலனுக்காகவும் பொருட்டு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. (அ)

# தேசியசபை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளோம். எமது நோக்கங்கள் நிறைவேற நமக்குள் ஏற்பட்டிருக்கும் ஒற்றுமை மேலும் நீடிக்க வேண்டும்.

''இந்தச் சந்தர்ப்பத்தில் மற்றுமொரு முக்கிய விஷயத்தை இங்கு கூறிவைக்க விரும்புகின்றேன்.

''விரைவில் தேசியசபை ஒன்றை நாம் அமைக்கவிருக்கின்றேம். இந்தத் தேசியசபையில், வடக்கு, கிழக்குமாகாண அங்கத்தர்கள் பிரதிநிதித்துவம் வகிப்பதுடன், அடுத்து மேற்கொள்ளப் படவிருக்கும் பல முக்கியபிரச்சினைகளும்இதில் ஆராயப்பட்டு தீர்க்கமான முடிவு மேற்கொள்ளப்படும். நாம் அமைக்கப்போகும் தேசியசபையில், நம்மை எதிர்நோக்கும் நெருக்கடிகள் பற்றி ஆலோசிக்கப்பட்டு, தமிழ்ஈழம் காணுவதற்கான வழிமுறைகள் குறித்து ஆலோசிக்கப்படும். இந்த முடிவுகள் பின்னர், தேசிய அரசுப்பேரவையில் சமர்ப்பிக்கப்படும்'' என்றும் திரு. மு. சிவசிதம்பரம் கூறினர்.

# பூநகரியில் குழாய் நீர்க்காணித்திட்டம்

யாழ்ப்பாணம், புதன்

பூநகரிப் பகுதியில், குழாய் நீர்க்காணித் திட்டம் ஆரம்பிக்கப்படவிருப்பதாக, விவசாயப் பகுதி உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்

கடந்த அரசாங்கத்தின் போது, இத்திட்டம்பற்றித் தீர்மானிக்கப்பட்டதாகவும், ஆனல் அரசியல் தலையீடு காரணமாக, இத்திட்டத்தை அமுல் நடத்தமுடியாமற்போய் விட்டதாகவும் அவர் கூறினர்.

இத்திட்டத்தின்மூலம், உற்பத்தியைப் பெருக்குவதுடன் வாலிபருக்கு வேலை வாய்ப்பு அளிக்கலாமென்றும் அவர் கூறினர். (க)

# ''உப அஞ்சல்அதிபர்சேவை நிரந்தரமாக்க வேண்டும்''

யாழ்ப்பாணம், புதன்

'உப அஞ்சல் அதிபர்களின் சேவையை நிரந்தரமாக்க வேண்டும். அதனுடன் ஓய்வூதியம் வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்'' என்று கோரும் தீர்மானம், ஸ்ரீலங்கா உப அஞ்சல் அதிபர்களின் சங்க வருடாந்தக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இலங்கை உப-அஞ்சல் அதிபர்கள் சங்கத்தின் நான்காவது வருடாந்தக் கூட்டம், யாழ் மத்தியகல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர்கள் திரு க. இராஜசிங்கம் தலைமையில் நடைபெற்றது. தலைவர் தமது உரையில் தபால்தந்திச்சேவை உப-அஞ்சல் அதிபர்கள் பிரதான அங்கம் வகிக்கின்றனர் அவர்களின் சேவை பொதுமக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் வகுக்கப்பட்டசேவைநிபந்தனைகளின்படி அவர்கள் இன்றும் சேவைக்கு அமர்த்தப்பட்டிருப்பது வருத்தத்துக்குரிய செயலாகும் 160 பேர் கொண்ட தேசியப்பேரவை உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும்போது, 2500 பேர் கொண்ட உப அஞ்சலதிபர்களுக்கு ஓய்வூதியம் வழங்கமறுக்கப்படுவது நியாயமற்ற செயலாகும்'' என்று குறிப்பிட்டார்.

பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ்ப்பாணப்பகுதி தபால் தந்திச்சேவை அத்தியட்சகர் திரு. மைக்கல் லியனகே பேசுகையில், உபஅஞ்சலதிபர்களின் சேவை பாராட்டுக்குரியதெனவும் அவர்கள் எந்நேரமும் முகமலர்ச்சியுடன் பொதுமக்களுக்குச் சேவைபுரிய வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

கிளிநொச்சித் தபால் தந்தி அத்தியட்சகர் திரு. ஏ. சி. கந்தசாமி பேசுகையில் உப-அஞ்சல் அதிபர்களின் ஆரம்ப சேவைக்கும் தற்போது அவர்கள் ஆற்றிவரும் சேவைக்கும் வித்தியாசமுண்டென்றும் அதற்கேற்றவாறு சேவை நிபந்தனைகள் மாற்றியமைக்கப்பட்டு அவர்களுக்குரிய சலுகைகள் வழங்கப்படுவது நியாயமானதெனவும் குறிப்பிட்டார்.

சங்கத்தின் செயலாளர் திரு. க. சிவஸ்கந்தா நன்றி கூறியதைத் தொடர்ந்து புதிய நிர்வாகசபை அங்கத்தவர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். போஷகர் க. இராஜரத்தினம், தலைவர்; க. இராஜசிங்கம், உபதலைவர்கள்: க. ஆறுமுகம் ஜே. பீ., ஏ. கோபாலரத்தினம், பொதுச்செயலாளர்: க சிவஸ்கந்தராசா, துணைச்செயலாளர்: எஸ். ரவீந்திரன், பொருளாளர்: இ நடராசா.

நிர்வாகசபை உறுப்பினர்கள்: சி ஜெகநாத், கொ அஸ்ரனிஸ்லாஸ், சு திருலோகசிங்கம், மா பாக்கியநாதன், வ கந்தையா, கே இராசையா, ஏ இராஜரத்தினம், கே இராஜரத்தினம், க சுப்பிரமணியம், ப சரசானந்தராசா, எஸ். இராஜரத்தினம்.

# ''பாடசாலையில் அரசியலை அனுமதிக்கக் கூடாது!''

## — கல்வி அமைச்சர்

கொழும்பு, செவ்

''மாணவர்களின்எதிர்காலம் ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. எனவே ஆசிரியர்கள் தைரியத்துடனும் சேவை மனப்பான்மையுடனும் கடமையாற்ற வேண்டும்'' என்று புதிய கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்ன தெரிவித்தார்.

இன்று கல்வி அமைச்சில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட திரு. நிஸங்கா விஜரத்னவுக்கும் பிரதி அமைச்சர் திரு. லயனல் விஜயதிலகாவுக்கு ஊழியர்கள் மகிழ்ச்சியானவரவேற்பளித்தனர்.

''கல்வித்துறையில்நிறைய சேவைகள் செய்யவேண்டி உள்ளது. இதை உணர்ந்து ஆசிரியர்களும் கல்வி அமைச்சின் சகல ஊழியர்களும் கடமையாற்ற வேண்டும் என்றுகேட்டுக் கொண்டார்.

அரசியல் புகக் கூடாது

ஊழியர்கள் மத்தியில் உரையாற்றிய பிரதிக் கல்வி அமைச்சர் திரு லயனல் அயதிலக, பாடசாலைகளுக்குள் அரசியல் புகாதவண்ணம் சகலரும் பார்த்துக் கொள்ளவேண்டாம் என்று கூறினர். (இ)

# பிணையில் சென்றனர்

திருகோணமலை, செவ்.

தேர்தல் வாக்களிப்பின் போது திருமலையில் இடம்பெற்ற வன்செயல்கள் சம்பந்த

(6-ம் பக்கம் பார்க்க)

# எம்.ஜி.ஆரின் பட்ஜட்டில் தேர்தல் வாக்குறுதி பிரதிபலிக்கவில்லை!

## கருணாநிதி கருத்து

சென்னை, ஜூலை 26
எம். ஜி. ஆரின் அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டம் அக்கட்சியின் தேர்தல் வாக்குறுதிகளை பிரதிபலிக்கக் கூடியதாக அமையவில்லை.

தமிழக முன்னாள் முதல்வரும் சட்டசபை எதிர்க்கட்சித் தலைவருமான திரு மு. கருணாநிதி தமிழ்நாடு அரசின் முதலாவது வரவுசெலவுத்திட்டம் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ்நாடு சட்டசபையின் காங்கிரஸ்கட்சித் தலைவர் திரு. ஏ. ஆர். மாரிமுத்து இது பற்றி தெரிவிக்கையில் புதிய பட்ஜட் சாதாரணமானதே. இதில் எதிர்பார்த்த முக்கிய அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று கூறினார்.

அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு முறையை தமிழக அரசு தொடர்ந்து வைத்திருக்கப் போவதாகத் தீர்மானித்துள்ளது ஏழை மக்களை வெகுவாகப்பாதிக்கும் என்று ஜனதா கட்சி உறுப்பினர் திரு. ஜேம்ஸ் கூறினார்.

### கிராமவளர்ச்சிக்கு முதலிடம்

புதிய பட்ஜட்டில் பொருளாதார முக்கியம் வாய்ந்த கிராம வளர்ச்சிக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது பாராட்டுக்குரியதுஎன்று தென் பாரத வர்த்தக தொழிற் சபைத் தலைவர் திரு லட்சுமணன் தெரிவித்துள்ளளார்.

கோரிக்கைவரி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதால் திரைப் படத்துறை அபிவிருத்தி அடையும் என்றும் திரு லட்சுமணன் கூறியுள்ளார். (இ)

# இந்திய பொலிஸ் நிர்வாகத்தை சீரமைக்க கமிஷன்

புதுடில்லி, ஜூலை 26
இந்திய பொலிஸ் நிர்வாகத்தை சிர்திருத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கும் பொருட்டு ஐந்து உறுப்பினர்கள் கொண்ட கமிஷன் ஒன்று நியமிக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் ராஜ்ய சபையில் தெரிவித்தார்.

இக்கமிஷனில் இரண்டு ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரிகளும் ஒரு சட்டத்தரணியும் அங்கம் வகிப்பார்கள் என்றும் திரு. சரண்சிங் கூறினார். (இ)

## ஷா கமிஷனுக்கு 30 ஆயிரம் புகார்கள்

புதுடில்லி, ஜூலை. 26
இந்திரா ஆட்சியில் நெருக்கடி நிலை அமுலில் இருந்தபோது இடம் பெற்ற அட்டுழியங்களை விசாரணை செய்ய நியமிக்கப்பட்டுள்ள ஷா கமிஷனுக்கு இதுவரை 30 ஆயிரம்புகார்கள் கிடைத்துள்ளன.

இத்தகவலை உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் ராஜ்ய சபையில் தெரிவித்தார்.

நெருக்கடிநிலை அட்டுழியங்கள் தம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கி வருகிறது என்றும் அவர் கூறினார். (இ)

# போரை நிறுத்த லிபியா--எகிப்து இணக்கம்

திரிப்பொலி, ஜூலை 26
எகிப்து-லிபிய எல்லையில் போரை நிறுத்துவதற்கு எகிப்தும் லிபியாவும் இணங்கியுள்ளன என்று பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஜஸைர் அரபாத் தெரிவித்தார்.

லிபியத் தலைவர் கேணல் கடாபியுடனும் எகிப்திய அதிபர் ஜனாப் சதாத்துடனும்பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே ஜனாப் அரபாத் திரிப்பொலியில் மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளையில் போரை நிரந்தரமாகநிறுத்தி நிலையான சமாதானம் நிலவச் செய்வதற்கான முயற்சிகளை அரபுத் தலைவர்கள் மேற்கொண்டுவருகின்றனர். (இ)

## இந்திய ஜனாதிபதிக்கு ஜே. ஆர். வாழ்த்து

புதுடில்லி, ஜூலை 26
இந்திய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளநீலன் சஞ்சீவரெட்டியைப் பாராட்டி உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பாராட்டுச் செய்திகள் வந்து குவிந்தவண்ணம் இருப்பதாக புதுடில்லி செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கைப் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா. பூட்டான் மன்னர் உட்பட பலவெளிநாட்டுத் தலைவர்களும் மாநில முதல்வர்கள், கவர்னர்கள் உட்பட பல உள்நாட்டுத் தலைவர்களும் பாராட்டுச் செய்திகளை அனுப்பியுள்ளனர். (இ)



வேலர்: என்ன சின்னையர் வீட்டிலை கல்யாணப்பந்தல் போட்டிட்டு கல்யாணத்தைப் பின்போட்டிருக்கினம்!?
மயிலர்: ஓ... அந்த ஹிப்பித்தலை மாப்பிளை தேர்தல் பந்தயத்தில் தோல்வி... இப்ப மொட்டை அடிச்சிருக்கிறார்... இனி அந்த ஹிப்பிச்சடை வளர்ந்துதான் கலியாணம்.

— சுந்தர்

# "தமிழீழ இலட்சியத்தில் உறுதியாக இருக்கின்றோம்"

பண்டத்தரிப்பு, செவ்.
"தனித் தமிழ் ஈழம் என்ற இலட்சியமே தமிழர் விடுதலைக் கூட்டணியின் இறுதி இலட்சியமாகும். எதிர்க் கட்சியின் தலைமைப்பீடத்தில் இருந்தாலென்ன, வேறு எங்கு இருந்தாலென்ன இந்த இலட்சியத்தில் நாம் மிகவும் உறுதியாக இருப்போம்."

இவ்வாறு வட்டுக்கோட்டை புதிய எம். பியாகத் தெரிவு செய்யப்பட்ட திரு தா. திருநாவுக்கரசு, வடலியடைப்பு மக்களால் தமக்களிக்கப்பட்ட வரவேற்புபசார வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். வடலியடைப்பு சங்கானை மேற்கு சனசமூக நிலையத்திற்கு அருகாமையில் திரு நா. சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

"தேர்தல் காலத்தில் பிரிந்து நின்ற மக்கள் அனைவரும் தங்கள் வேறுபாடுகளை மறந்து இனி ஓரணியில் திரண்டு நிற்கவேண்டும். தமிழர் விடுதலைக் கூட்டணி தொடர்ந்து நடாத்தவிருக்கும் இயக்கங்களில் தமிழ் மக்கள் ஒற்றுமையுடன் பங்கேற்க வேண்டும். எனது தொகுதியைப் பொறுத்தவரை சகல கிராமங்களுக்கும்நேரில்சென்று மக்களின் குறைகளையும், கஷ்டங்களையும் நிவிர்த்தி செய்ய என்னாலான பணிகளைச் செய்வேன். சகல பகுதிகளுக்கும் பாகுபாடற்றமுறையில் சேவையாற்றுவதே எனது இலட்சியமாகும்."

......

## இ. போ. சபையில் மீண்டும் வேலை

கொழும்பு, செவ்.
கட்டாய லீவில் அனுப்பப்பட்ட ஐம்பத்தைந்து இ போ. ச. ஊழியர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ளது

இ. போ. சபையில் மீண்டும் நியமனம் பெற்றவர்களில், பொது முகாமையாளர், பொது சனத் தொடர்பு அதிகாரி, கணக்காளர்கள், டிப்போ மனேஜர்மார் ஆகியோரும் அடங்குவார்கள்.

## இன்று துரையப்பா நினைவு தினம்

யாழ்ப்பாணம், புதன்
அமரர் அல்பிரட் துரையப்பாவின் இரண்டாது சிரார்த்த தினம் இன்றாகும்.
(கெ-அ)

# பீஹார் இயக்கத்தை எம்.ஜி.ஆர். அவமதித்தாராம்

## சர்வோதய இயக்கபிரமுகர் கண்டனம்

சென்னை, ஜூலை 26
தமிழ்நாடு சட்ட சபையில் முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அகில இந்திய சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணின் பீஹார் இயக்கத்தை அவதூறுகப் பேசியுள்ளாரென்று சர்வோதயப் பிரமுகர் ஒருவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சர்வோதய இயக்கத்தின் பீஹார்த் தலைவர் திரு ஜகந்நாதன் இது குறித்து ஒரு அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

பீஹார் இயக்கம் என்பது பல துறைகளிலும் மாற்றங்கள் செய்வதற்கான இளைஞர் அணியென்பதை முற்றுக உணராமல், முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் பேசியது தவறாகும். கல்வித்துறையில் மாற்றம் கோரியதால், அதைப் பயங்கர இயக்கமாகக் கருதுவதற்கு இடமில்லையென அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (கெ-இ)

# இஸ்ரேலுக்கு அமெரிக்கா 25 கோடிடாலர் ஆயுதஉதவி

ஜெருசலம், ஜூலை, 26
25 கோடி டாலர் பெறுமதியான நவீன ஆயுதங்களை அமெரிக்கா, இஸ்ரேலுக்கு வழங்கும் என்று இஸ்ரேலியப் பிரதமர் திரு. மெனச்செம்பிகின் தெரிவித்துள்ளார்.

தாம் அண்மையில் அமெரிக்கா சென்றிருந்த போது, அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் ஆயுதஉதவி குறித்து தம்மிடம் உறுதி கூறினாரென்றும் திரு. பிகின் தெரிவித்தார்.

அமெரிக்க-இஸ்ரேலிய நட்புறவு சிறிது காலம் பாதிக்கப்பட்டிருந்ததற்குக் காரணம்முன்னைய ராபின் அரசாங்கம் கடைப்பிடித்த கொள்கைகளே என்றும் பிரதமர் தெரிவித்தார். (இ)

# தகவல் தொடர்புசேவை மாற்றி அமைக்கப்படும்

கொழும்பு, செவ்
புதிய பத்திரிகைச் சபையொன்று அமைக்கப்படும் என்று தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. டி. பி. விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

தகவல் சேவையை புனரமைக்கு வேலை எனது அமைச்சில் முதலிடம் பெறும். சாதாரண ஒரு மனிதனுக்கு இச்சேவையின் மூலம் நன்மை கிடைக்கும் வகையில் மாற்றங்கள் ஏற்படும். வானொலிச் செய்திகளை முன்னர் மக்கள் நம்புவதேயில்லை என்று தெரிவித்த அமைச்சர் பத்திரிகைச்சபைபற்றியும் குறிப்பிட்டார்.

அமைச்சரின் ஆலோசனையின்பேரில், பத்திரிகைச் சபை உறுப்பினர்களை ஜனாதிபதி நியமிக்கின்றார். இச் சபையை மாற்றி அமைக்க வேண்டும். இதற்கு, இச் சபையின் உறுப்பினர்கள் ராஜினாமா செய்யும்வரை நாம காத்திருக்கவேண்டியுள்ளது. அடுத்தசில ஆண்டுகளுக்குள் பத்திரிகைச சபை உறுப்பினர்கள் ராஜினாமா செய்யாவிட்டால், அவர்கள் வெளியேற்றப்பட்டு புதியதொரு பத்திரிகைச் சபை அமைக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

"அரசாங்க தகவல் நிலையத்துக்கும் நாட்டின் பத்திரிகைகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு-இணைப்பு ஏற்படவேண்டும். இதனை அடையமுங்கான மாநாடுகளை நடத்தி ஒரு திட்டத்தை வரைய வேண்டும். எனது நோக்கம் ஜனநாயக முறையில் அமைந்த சுதந்திரமான தகவல் தொடர்பு சேவையை ஏற்படுத்துவதே" என்றும் அமைச்சர் கூறினார்.

### தேர்தல்பற்றி ஒரு புள்ளிவிபரக் கண்ணோட்டம்:

# தமிழ்ஈழக் கோரிக்கைக்கு எத்தனை வீத ஆதரவு

( 'திரு' )

1977-ம் ஆண்டுப் பொதுத் தேர்தல் தமிழமக்களைப்பொறுத்தவரையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தேர்தலாக நடைபெற்றது என்பதை ஒவ்வொரு தமிழமகனும் உணர்ந்திருப்பான். ஜூலை 77-ல் தமிழ்மக்கள் மத்தியிலே ஒரே ஒருதமிழர்களின் அரசியல்கட்சியாகிய தமிழர் விடுதலைக் கூட்டணியே தேர்தலில்போட்டியிட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணி இத்தேர்தலை ஒரு சர்வஜன வாக்கெடுப்பாக அதாவது தமிழ் ஈழம் அமைப்பது பற்றிய ஈழத் தமிழரின் கருத்தினை அறியவும், உலகிற்கும, இலங்கையில் உள்ள ஒவ்வொரு சிங்களக் குடிமகனும் உணர்வதற்காகவும் கருதி 23 தொகுதிகளில் 24 வேட்பாளர்களையும், தமிழர் கூட்டணியின் தலைவர் திரு. தொண்டமான், திரு செல்லச்சாமி கூட்டணியின் முழு ஆதரவுடன் கூட்டணியின் வேண்டுகோளின்படி தமது இ. தொ. கா. சார்பில் போட்டியிட்டார்கள். பல பல மேடைகளில் பலர் இவ்வாக்கெடுப்பை சர்வஜன வாக்கெடுப்பாகக் கருதக் கூடாது என்று கூறிவந்த போதிலும் ஈழத்தமிழர் இவ்வாக்கெடுப்பை கூட்டணியின் வேண்டுகோளின்படி சர்வஜன வாக்கெடுப்பாகக்கருதிச்செயல்பட்டுள்ளனர் என உறுதியாகக் கூறக்கூடியதாக உளளது. ஒவ்வோர் தொகுதியிலும் தமிழர் கூட்டணி வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளை அவதானிக்கும்போது தெளிவாக ஒரு கருத்தை அனைவரும் விளங்கக்கூடியதாக உள்ளது. தமிழர் கூட்டணியின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களில் 17 பேர் வெற்றியீட்டிய போதிலும் ஒவ்வொரு தொகுதியிலும் மக்கள் எவ்வாறு வாக்களித்துள்ளார்க்ள் என்பதை அவதானிப்பது உதவியாக இருக்கும்.

| தேர்தல் தொகுதி இல: | தொகுதி | மொத்த வாக்காளர் | வாக்களித்தோர் | த. வி. கூ. பெற்றது | சதவீதம் | மக்களின் சதவீதம் சிங்களவர் | தமிழர் | முஸ்லீம்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 79 | ஊர்காவற்றுறை | 36,372 | 27,484 | 17,640 | 64% | 3.15 | 94.57 | .13 |
| 80 | வட்டுக்கோட்டை | 40,684 | 33,318 | 23.384 | 70% | 2.88 | 95.71 | .63 |
| 81 | காங்கேசன்துறை | 43,907 | 36,477 | 31.155. | 85% | 1.47 | 95.98 | .33 |
| 82 | மானிப்பாய் | 41,373 | 32,802 | 27 550 | 85% | 2.73 | 95.02 | .10 |
| 83 | கோப்பாய் | 41,824 | 33,412 | 25,840 | 76% | .68 | 96.67 | .08 |
| 84 | உடுப்பிட்டி | 36,955 | 29,583 | 18,768 | 63% | 4 33 | 93 53 | .09 |
| 85 | பருத்தித்துறை | 28,447 | 23,291 | 12,989 | 56% | 3.72 | 93.47 | .33 |
| 86 | சாவகச்சேரி | 36,959 | 31,657 | 20,028 | 62% | 1.92 | 95.57 | .67 |
| 87 | நல்லூர் | 40,205 | 33,392 | 29,858 | 89% | 4.03 | 90.97 | .43 |
| 88 | யாழ்ப்பாணம் | 34,865 | 28,703 | 16,251 | 56% | 3.56 | 80.24 | 10.49 |
| 89 | கிளிநொச்சி | 26,670 | 21,158 | 15,507 | 73% | 2.29 | 80.11 | 1.39 |
| 90 | மன்னர் | 31,767 | 29,333 | 15,147 | 52% | 4.27 | 49.75 | 25.25 |
| 91 | முல்லைத்தீவு | 24,698 | 19,596 | 10,261 | 51% | 7.26 | 79 94 | 5.39 |
| 92 | வவனியா | 28,450 | 23,416 | 13,821 | 62% | 21.10 | 51.49 | 7.63 |
| 94 | திருகோணமலை | 35,778 | 29,242 | 15,144 | 52% | 23.28 | 51.31 | 17.16 |
| 65 | மூதூர் | 30,389 | 27,850 | 7,520 | 27% | 3.86 | 28.19 | 65.78 |
| 96 | கற்குடா | 33,995 | 29,242 | 12.595 | 44% | 3.65 | 64.09 | 28.42 |
| 67 | மட்டக்களப்பு | 63,039 | 49,091 | 107,891 | 45% | 3.94 | 56.86 | 33.43 |
| 98 | பட்டிருப்பு | 35,909 | 32,319 | 15,877 | 49% | 5.57 | 91.66 | .96 |
| 100 | சம்பாந்துறை | 27,308 | 24,862 | 8,165 | 34% | 2.20 | 21.71 | 74.20 |
| 101 | கல்முனை | 28,826 | 26,712 | 7,903 | 30% | 1.22 | 28.06 | 69.21 |
| 102 | பொத்துவில் | 49,691 | தேர்தல் | நடைபெற | வில்லை | 14.99 | 32 55 | 49.11 |
| 103 | புத்தளம் | 37,177 | 31,071 | 3,268 | 11% | 37.93 | 19 89 | 38.47 |

**வாக்களித்தவர்கள்: 6,58,865.** **த. வி. கூ. பெற்ற வாக்குகள்: 3,73,216.**

**த. வி. கூ. பெற்ற வீதம்: 57 வீதம்.**

இவ் அட்டவணையைப் பார்க்கும்போது தனிநாட்டுக் கொள்கையை 57 வீதமான வாக்காளர்கள் வரவேற்கிறுர்கள் என்ற உண்மை புலனுகிறது. ஆயினும் தமிழ்ப்பிரதேசங்களில் தமது கொள்கையும் தனிநாட்டுக் கொள்கை எனவும் தமக்குக் கிடைக்கும் வாக்கையும் தமிழர் விடுதலைக்கூட்டணி சர்வஜன வாக்கெடுப்பில் சேர்த்துக்கொள்ளலாம் என்று மேடைகளில் கூறினார்கள் உண்மையான கணக்கில் சேர்த்துக்கொள்ளாவிட்டாலும் இன்னும் கூடுதலான வாக்காளர்கள தனிநாட்டுக் கோரிக்கையை ஏற்கிறுர்கள் என்பது புரிகிறது. எனவே 57 வீதத்திலும் கூடுதலானேர் தனிநாட்டுக் கோரிக்கையை ஆதரிக்கிறுர்கள்.

மட்டக்களப்புத் தொகுதியில் உருவாகிய சூழ்நிலை தமிழர் கூட்டணி வேட்பாளர்களிடையே பெரும் பிளவையும் மோதலையும் ஏற்படுத்தியதால் தனிநாட்டுக் கொள்கையுடையவர்கள் கூட வாக்களிக்காமலோ அல்லது யாருக்கு எப்படி வாக்களிப்பது என்னும் குழப்பமான நிலைக்குத் தள்ளப்பட்டனர். இப்பிரச்னையை தமிழர் கூட்டணித்தலைவர்கள் மிகவும் யோசனையுடன் செயல்பட்டிருப்பின் தீர்த்திருக்கலாம். இதனுல் மட்டக்களப்பில் விரும்பத்தகாக சூழ்நிலை உருவாகியுள்ளது.

இலங்கையில் தமிழர்விடுதலைக் கூட்டணி போட்டியிடாத தொகுதிகளிலும் ஆங்காங்கே சிறிய அளவில் தமிழர் வசிக்கிறுர்கள். உதாரணமாக சேருவல தொகுதியில் 18.77% இலங்கைத்தமிழரும், 13 62% இலங்கைச்சோனகரும், மகாநுவர தொகுதியில் 12.63% இலங்கைத்தமிழரும், 13.09% இலங்கைச்சோனகரும் பரவலாக வாழ்கிறுர்கள். இவர்களின் மனக்கருத்தை தமிழர் கூட்டணியின் வாக்கெடுப்பு மூலம் அறிய முடியாது போய்விட்டது.

இதைவிட கொழும்புமேற்கு தொகுதியில் 27.56% இலங்கைத் தமிழரும், 11.47%சோனகரும், 6.93% இந்தியத் தமிழரும் வாழ்கிறுர்கள்.

முஸ்லிம் மக்கள் பெருந்தொகையாகவசிக்கும் தொகுதிகளில் த. வி. கூ. சார்பில் போட்டியிட்ட முஸ்லிம்வேட்பாளர்களுக்குக் கிடைத்துள்ள சிறியஅளவிலானவாக்குகளின் எண்ணிக்கையை அவதானிக்கும் பொழுது தமிழர் கூட்டணியின் தனிநாட்டுக் கொள்கையை அவர்கள் முழுமனதுடன் வரவேற்கவில்லை என்பதே. இது போதியளவு பிரசாரம் செய்யப்படாமையால் ஏற்பட்ட விளைவாக இருக்கலாம். ஆனுல் இப் பிரதேசங்களில் பெற்ற முடிவு தமிழர் கூட்டணியினர்க்கு கவலைக்குரியதாக அமையும்.

கற்குடா தொகுதியில் தமிழர் கூட்டணி வேட்பாளர் குறைவான வாக்குகளால்தான் தோல்வியடைந்தாராயினும் அவருக்கு வாக்களித்தவர்களில் 44% வாக்குகளைப் பெற்றுள்ளார். 1970ம் ஆண்டில் திரு. அமிர்தலிங்கம், திரு. சிவசிதம்பரம் ஆகியோர் தமது தொகுதிகளில் தோல்வியடைந்த போதிலும், அவர்களுக்குப் புதியதொகுதிகளான காங்கேசன்துறை, நல்லூர் தொகுதிகளில் கூட்டணி சார்பில் போட்டியிட்டு முறையே 85%, 89% வாக்குகளைப்பெற்றது, தமிழர் கூட்டணியின் தனிநாடு கோரிக்கை அடைந்த மிகப்பெரிய வெற்றியாகக் கருதமுடிகிறது.

இதைவிட தமிழ்மக்களிடையே சாதிவேற்றுமை அழிந்துவிட்டது எனவும், தனிநாட்டுக்கோரிக்கை சாதிக்கு அப்பாற்பட்டது என்பதையும் உணர்த்த உடுப்பிட்டித் தொகுதியில் திரு. இராஜலிங்கத்தை கூட்டணி வேட்பாளராக நிறுத்தியதால்அவர் சுமார் 15 ஆயிரம் மேலதிக வாக்குகளால் வெற்றிபெற்றது அவரை நிறுத்திய நோக்கம் வெற்றியடைந்துள்ளது என்பது தெளிவாகிறது. திரு. இராஜலிங்கம் போட்டியிடுவதற்காக தனது தொகுதியை விட்டுக்கொடுத்த திரு ஜெயக்கொடிக்கே இப்பெருமை சாரும். பொத்துவிலில் பெறப்போகும் முடிவும் த வி. கூ.க்கு சார்பாக இருக்கும் என்று கருதமுடிகிறது. தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் இலங்கையின் அரசை எக்கட்சி அமைக்கிறது என்பது அவசியமில்லாமல் உள்ள நிலையில் தமிழ்மக்கள் தமிழர் கூட்டணிக்கு அளித்த தீர்ப்பு இலங்கையில் மட்டுமல்லாது அனைத்துலகையும் சிந்திக்க வைக்கும் தீர்ப்பாக அமைந்துள்ளது என்பதில் ஐயமில்லை.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழ இல: M B/14189

1. நாகலிங்கம் அம்பலவாணரும் பெண்
2. ஞானம்பிகையும் வட்டுக்கோட்டை கிழக்கு.

வழக்காளி

எதிராக

பண்டாரி வேலுப்பிள்ளை கைம் பெண் தெய்வானைப் பிள்ளை, வட்டுக்கோட்டை கிழக்கு காலஞ்சென்ற பண்டாரி வேலுப்பிள்ளையின் சொத்துக்களின் சட்டபூர்வ பிரதிநிதி.

எதிராளி

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில் M B 14189-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1977-ம் ஆண்டு ஆவணி மாதம் 29-ந் திகதி திங்கட்கிழமை மு ந ப க ல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபா 1515/-வும் மேலும் 1000 ரூபாவுக்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 10 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1973-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 9-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1975-ம் ஆண்டு ஆனி மாதம் 6-ந் திகதி வரையுமான வட்டியும் அதன் பின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீதவட்டியும் வழக்குச்செலவு ரூபா 501/21 கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு வட்டுக்கோட்டை கோயிற்பற்று வட்டுக்கோட்டை கிழக்கு இறை நாணியவத்தை பர. நில. இலா. ஒன்றும் (1) குளி பதிறைரையும் கிணற்றில் பங்கும் வீடும் வான்பயிர் செய்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு அம்பலவாணர் செல்லத்துரையின் உரிமைக்காரருக்கும் அப்பாத்துரை வயித்திலிங்கத்துக்குமுரியவாதனங்கள், வடக்கு சின்னத்தம்பி செல்லத்துரைக்கும் சின்னத்தம்பி யோகம்மாவுக்கும் உரிய ஆதனம், மேற்கு பண்டாரி வேலுப்பிள்ளைக்கும் முருகர் மாணிக்கம் பெண் தெய்வானைக்குமுரியவாதனங்கள், தெற்கு அம்பலவி வேலுப்பிள்ளைக்குரியவாதனமும் ஒழுங்கையும் இந்தெல்லைப் படி இதடங்கலும்.

சி. செ. பாலசிங்கம்,
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை
21-7-77.

6712

புங்குடுதீவுக்கு

## விரைவில் குடிநீர் வழங்குவதாக உறுதி

புங்குடுதீவு, செவ் குடிதண்ணீர்க் கஷ்டத்தால் அவதியுறும் புங்குடுதீவு மக்களுக்குக் குடிதண்ணீர் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளைக் காலதாமதமின்றி மேற்கொள்ளுமாறு தமிழ்மக்கள் இயக்கத்தலைவர் திரு.யோகேந்திரா துரைசுவாமி யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரைக் கோரியுள்ளார்.

புங்குடுதீவின் பல பாகங்களுக்கும் நேரிற்சென்று பார்வையிட்ட திரு. யோகேந்திரா குடிதண்ணீர்க் கஷ்டத்தால் மக்கள் படும்இன்னல்களை அரசாங்க அதிபருக்கு உருக்கமாக எடுத்துரைத்து உடனடியாக லொறி மூலம் குடிதண்ணீர் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

புங்குடுதீவு இணக்கசபைத் தலைவர் திரு.செ.தில்லைநாதன் தலைமையில் புங்குடுதீவுமக்கள் சார்பில் தூதுக்குழுவொன்றும் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரை அவரது அலுவலகத்தில் சந்தித்து புங்குடுதீவு மக்களின் குடிதண்ணீர்க் கஷ்டம் குறித்து எடுத்துரைத்தது இத் தூதுக்குழுவில் புங்குடுதீவு ஐந்துஇளைஞர் சங்கத்தின்செயலாளர் திரு த. துரைசிங்கம், திரு. மு. வைத்திலிங்கம், திரு. சி. க. நடராசா, திரு. ஆ. அரியரத்தினம் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

தூதுக்குழு தெரிவித்த கருத்துக்களை மிக்க அனுதாபத்துடன் கேட்டறிந்தஅரசாங்க அதிபர் திரு. விஜயபாலா விரைவில் குடிதண்ணீர்வழங்க ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தார். (அ)

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30 9-45
சனி, ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன்–லதா
வீட்டுக்கு வந்த மருமகள்

நாகம்ஸ்
(சுன்னகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ஜெமினி–ஏ.வி.எம். ராஜன்
வீர அபிமன்யு

சாந்தி யாழ். நகர் தினசரி 10-30, 9-30, 6-30, 9-45
போன்: 7642
Tissa, Malini Fonsega
Jo Sugantha's NEELA நீலா (சிங்களம்)

RIO (Jaffna) Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
CRAZY BOYS and
THE QUEEN'S NECKLACE
(Color-Scope)

மகத்தான 2-வது மாதம்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி – பத்மபிரியா
முத்துராமன் – சகுந்தலா நடித்த
ஸ்ரீதரின் வைரநெஞ்சம்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் [யாழ்.நகர்] தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் – ஜெய்சித்ரா
தாய் இல்லாக் குழந்தை

லிடோ (யாழ்.நகர்) போன்: 7693 தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர்—சுஜாதா
நீ ஒரு மகாராணி

ராஜா (யாழ்நகர்) 81-வது தினம்
தினசரி 4 காட்சிகள்
போன்: 7160
தேவரின் திருவருள் (ஈஸ்ட்மன்கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

கடைசிவாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவராம், கீதாஞ்சலி, தர்மலிங்கம், ஸ்ரீதேவி நடித்த
ஜெயேந்திரா மூவிஸ்
காத்திருப்பேன் உனக்காக

REGAL (JAFFNA) Daily at 4-45, 7-00 & 9-30 p.m. only
NORMAN WISDOM IN
"ON THE BEAT"
FULL COMEDY

84-வது நாள்
ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்] எம். ஜி. ஆர். – ரி. ஆர். ராஜகுமாரி
குலேபகாவலி
30-7-77 முதல்
எம். ஜி. ஆர் – லதா நடித்த
உழைக்கும் கரங்கள்


# 'எனதுகாதலனை என்னுடன் சேர்த்து வையுங்கள்'

## தாயாகி விட்ட இளம்பெண் பொலிஸில் விண்ணப்பம்

பண்டத்தரிப்பு, செவ் ஆஸ்பத்திரியில் சிற்றூழியராகக் கடமையாற்றும் இளைஞர் ஒருவர் தம்மைக் காதலித்து ஒரு ஆண்குழந்தைக்குத் தயாக்கிவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டதாகவும் அவரை எப்படியாவது மீட்டுத்தந்து தம்முடன் வாழ வைக்குமாறும் பெரியவிளானைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் உதவி கோரியுள்ளார்.

யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் சிற்றூழியராகக் கடமையாற்றும் எஸ். சிவராசா என்பவரே பிரஸ்தாப நபரென்றும் தம்மைத் திருமணம் செய்வதாக அவர் உறுதியளித்ததன் பேரில் இருவரும உறவுபூண்டு வாழ்ந்ததாகவும் கடந்த மாதம் தமக்கு ஓர் ஆண்குழந்தை யாழ். வைத்தியசாலையில் பிறந்துள்ளதாகவும அவர் பொலிசாருக்கு அளித்துள்ள வாக்கு மூலத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆஸ்பத்திரியில் குழந்தை பிறந்தவுடன் அங்கு வந்து சகல உதவிகளையும் செய்த பிரஸ்தாப இளைஞர் அங்கிருந்து வீட்டிற்குத் திரும்பிய பின்பு தம்மையும் குழந்தையையும் வந்துபார்க்காது புறக்கணித்து நடப்பதாகவும் இதனால் தமது எதிர்காலம் பற்றி மிகுந்த கவலையடைவதாகவும் மேலும் தெரிவித்

(6-ம் பக்கம் பார்க்க)

## தேர்தல் கொலைகள் அதிகரிப்பு

கொழும்பு, செவ்வாய்

தேர்தல் கலவரங்களினால் பலியானவர்களின் தொகை, இருபத்தொன்றாக அதிகரித்துள்ளது.

இவற்றில், கொடூரமான கொலை என்று கூறப்படும் சம்பவம், அல்கம என்னுமிடத்தில் நடைபெற்றுள்ளது. இங்கு டிங்கிரி மாத்மயாவும அவரது மகன் விஜேதுங்காவும், கற்களால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர். வறக்காபொல பொலிஸ் தகவலின்படி தந்தையும் மகனும் அவர்களின் வீட்டில் இருந்தபோது, மாற்றுக்கட்சியைச் சேர்ந்த ஒரு கோஷ்டியினால் கற்களால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டனராம்.

......

### கட்டுநாயகா...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

துறைக்குமிடையில் பாகுபாடு காட்டப்படமாட்டாது என்றார் அமைச்சர் அதிகாரத்துஷ் பிரயோகத்துக்கு இடம் கொடுக்கப்படமாட்டாது என்றுகூறிய அமைச்சர் கூட்டுத்தபானங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் 'சரியாகப்பயன் படுத்தப்படவில்லையென்றும் இதைக் கவனிக்க ஒரு விசேஷப் பிரிவு ஏற்படுத்தப்படும் என்றும் கூறினர்.

எதிர்வரும் நவம்பர் மாதம் புதிய அரசின் வரவுசெலவுத் திட்டம் பேரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் சொன்னர்.

### பிரதமர்—

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மகாமலுவவை மீண்டும் தலாதா மாளிகையிடம் ஒப்படைக்கும் வைபவத்திலும் பிரதமர் கலந்துகொள்வார்.

நாளை புனித தந்தத்தைத் தரிசிக்கும் பிரதமர் எண்கோண கட்டிடத்திலிருந்து நாட்டுமக்களுக்கு விசேஷ உரை நிகழ்த்துவார். (அ)


வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி, சரோஜாதேவி
தாமரை நெஞ்சம்


## பேருவளை எம்.பி. உபசபாநாயகர்?

கொழும்பு, செவ்வாய்

பேருவளை எம். பி. ஜனாப் மாக்கீன் மார்க்கார் தேசிய அரசுப்பேரவையின் உபசபாநாயகராக நியமிக்கப்படலாமென நம்பகமான அரசியல் வட்டாரங்களில் கருத்து நிலவுகிறது.

கடந்த அரசாங்கத்திலும் பேருவளை சுதந்திரக்கட்சி எம். பி. ஜனாப் ஐ. ஏ. காதர் உபசபாநாயகராகப்பதவி வகித்தார்.

கோட்டே எம். பி. திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் நியமிக்கப்படவிருக்கிறார் முன்னைய அரசிலும் கோட்டே எம். பி திரு. ஸ்ரான்லி திலகரத்ன சபாநாயகராகவிருந்தார். (அ)


பயிற்சி

6 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 01-08-ல் ஆரம்பமாகவுள்ளது. விபரங்களுக்கு; இன்ஸ்டிரியூட் ஒவ் எஞ்ஜினியரிங் ரெக்னேலொஜி, 11/B, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 6686

வரி விளம்பரம்

விற்பனைக்கு

கலப்பற்ற உயர்ந்தரக ஜேஸி. பால்மாடும் கன்றும் (அதிக பால் தரக்கூடியது) விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். ஐ. சபாரெத்தினம், 115, அரசடி வீதி, சபாஸ்லேன், கந்தர்மடம். 6715

தேவை

யாழ்ப்பாண எல்லைக்குள் சகல வசதிகளுடன் கூடிய நவீன வீடு வாடகைக்கு அல்லது வாங்குவதற்குத் தேவை. விபரங்களை, கீழ்க்காணும் முகவரிக்கு எழுதவும் விளம்பர இல: 6718, மே/பா. 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 6718

18வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள் தேவை நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் சமுகந்தரவும் வீனஸ் இன்டஸ்றீஸ், 119/3, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 6717

நெசவுத் தொழில் அனுபவம்உள்ள பெண்பிள்ளைகள் தேவை. விபரங்களுக்கு சோதி மாளிகை, நீலிப்பந்தனை, காரை நகர். 6720

சிறுவர் உடை, சேட், பிளவுஸ், வெட்டி தைப்பதில் அனுபவம் உள்ள பெண்பிள்ளைகள் தேவை. 1-8-77 முன் தொடர்புகொள்ளவும். சோதி மாளிகை, நீலிப்பந்தனை காரை நகர். 6721

தேவை

வெல்டிங், மெக்கானிக், பிற்றேஸ் வேலைகளுக்கு அனுபவமுள்ள தொழிலாளர்கள் தேவை.
நாளாந்தச் சம்பளம் ரூபா 15/-க்கும் ரூபா 20/-க்கு மிடையில் திறமைக்கேற்ப வழங்கப்படும்.
நற்சாட்சிப் பத்திரங்களுடன் 1-8-77 திங்கட்கிழமை நேரில் வரவும்.

பொது முகாமையாளர்
சீநோர் அபிவிருத்தி நிறுவனம்,
காரைநகர். 6719


## கேள்விப்பத்திர அறிவித்தல்

### மண்டைதீவுக் கடற்றெழில் துறை முகத்திலிருந்து 250 அடி நீளமான வீதியொன்றைக் கடலினூடாக அமைத்தல்

(250 அடி நீளம், கீழ் அகலம் 18 அடி, மேல் அகலம் 12 அடி உயரம் 5 அடி)

### நிபந்தனைகள்

- i கேள்விப்பத்திரம் 1977-ம் ஆண்டு ஆவணி மாதம் 1-ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
- ii குறைந்த கேள்விதாரர் அன்று 11 மணிக்குச் சங்க நிர்வாகிகளுடன் ஓர் ஒப்பந்தத்தை அமைத்துக்கொண்டு வேலையைப் பொறுப்பேற்கலாம்.
- iii குறிப்பிட்ட தவணையில் ஒப்பந்தகாரர் வேலையைப் பூர்த்தி செய்து கொடுத்தல் வேண்டும்.
- iv வேலை ஆரம்பித்ததும் செய்து முடிக்கப்பட்ட பகுதிக்குரிய பணத்தில் 10% தவிர்த்த மீதிப் பணத்தைக் தேவையாயின் பெற்றுக்கொள்ளலாம்.
- v கேள்விதாரர்கள் தங்கள் விண்ணப்பப் படிவங்களை

ச. இ. திருச்செல்வம்,
(காசாளர்)
3-ம் வட்டாரம், மண்டைதீவு.

என்ற விலாசத்துக்கு அஞ்சல் மூலமாகவோ நேரிலோ அனுப்பி வைக்கலாம்.

- vi தெளிவான விளக்கங்களை விபரமாக அறிய விரும்புவோர் மண்டைதீவு தைலோன் சங்க அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

ம. லாசரஸ். (சங்கத் தலைவர்)
ம. நிக்கோலாப்பிள்ளை. (சங்கச் செயலாளர்)

மண்டைதீவு மீனவர் நலநோக்குச் சங்கம்
மண்டைதீவு.

6716

ஈழநாடு
EELANADU

## மூன்று ஏக்கர் காணி 40 பேருக்கு பங்கீடு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் கொட்டடியிலுள்ள 'மருதோண்டிக்காடு' என்ற 3 ஏக்கர் காணி 40 பேருக்கு பகிர்ந்தளிக்கப்படவிருக்கிறது.

இதற்கான நேர்முகப் பார்வை கடந்த மாதம் 29-ம் 29-ம் தேதி யாழ்ப்பாணம் காணிக்கச்சேரியில் நடைபெற்றது.

கொட்டடி பகுதியில் வசிக்கும் காணியற்றவர்களுக்கு தலா 1 பரப்பு வீதம் குடியிருப்பதற்கு வழங்கப்படவிருக்கிறது.

இந்த 3 ஏக்கர் காணியும், தனிப்பட்ட சொந்தக்காரர்களிடமிருந்து சுவீகரிக்கப்பட்டதாகும். (க)

## "மக்கள் பிரச்னைகளைத் தீர்ப்பதே எமது முதற்கடமை"

### — நீர்ப்பாசன அமைச்சர்

கொழும்பு, செவ்.

"எமது அரசாங்கத்தினால் மக்கள் பிரச்னைகளைத் தீர்க்க முடியாவிட்டால் எந்த அரசினாலும் இனித் தீர்க்க முடியாது" என்று நீர்ப்பாசன நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு காமினி திஸநாயகா அமைச்சுக் காரியாலயத்திற்கு முதன் முதலில் விஜயஞ் செய்த போது ஊழியர்கள் வரவேற்பில் பேசுகையில் கூறினர்.

"இன மத கட்சி பேதமின்றி யாவரும் எமக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும்" என்று அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

"நாட்டு மக்களின் உணவு, விவசாயப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு எமது அமைச்சின் பங்கு மிக அத்தியாவசியமானது. மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதே எமது அரசின் முதற் கடமை" என்று அமைச்சர் கூறினர். (அ)

### பிணையில்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகக்கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை திருமலை நீதவான் திரு. நிமால் திஸநாயகா, விசாரணையின்பின் பிணையில் செல்ல அனுமதித்தார். பிணையில் விடுவதற்குப் பொலிஸார் தெரிவித்த ஆட்சேபத்தை நிராகரித்து நீதவான் 'இவர்களைப் பிணையில் செல்ல அனுமதித்தார்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் இரா சம்பந்தன், மு. சோ. செல்வராசா, வ. இ. சச்சிதானந்தன், இ. விக்னேஸ்வரன், இ. ரங்கநாதன் ஆகியோர் ஆஜராகினர். (அ)

## பிள்ளைகள் முன்னிலையில் தற்கொலை செய்த தந்தை

யாழ்ப்பாணம், புதன்

பிள்ளைகள் பார்த்துக் கொண்டிருக்க அவர்கள் முன்னிலையில் ஒரு போத்தல் சாராயத்துடன் நச்சுத்திராவகத்தை கலந்து குடித்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் கங்காணி ஒருவர் தற்கொலை செய்துகொண்டார்.

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த 42 வயதான சண்முகம்பிள்ளை குலசேகரம் பிள்ளையின் மரணவிசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது

யாழ்ப்பாணம் மரணவிசாரணை அதிகாரி சட்டத்தரணி எஸ். எஸ். பிரான்சிஸ் மரண விசாரணை நடத்தினர்.

இறந்தவர் அடிக்கடி மது அருந்தியபின் பல தடவை சாகப்போவதாக பயமுறுத்தி வந்தாரென்றும் சம்பவ தினம் வேலையால் வரும்போது சோற்றுப் பார்சலும் நண்டுக்கறியும் 1 போத்தல் சாராயமும் கொண்டுவந்து வீட்டிற்குள் பாயை விரித்து அதிலிருந்து கொண்டு சோற்றுடன் முக்கால் போத்தல் சாராயத்தைக் குடித்தாரென்றும், அதன்பின் நச்சுத்திராவகத்தை கலந்து குடித்தாரென்றும் விசாரணையில் கூறப்பட்டது.

இவருடைய மனைவியும், ஆஸ்பத்திரியில் ஒரு கங்காணியென்றும் அவர் கடமைக்குச் சென்றிருந்தபோதே இவர் நச்சுத்திராவகம் அருந்தினர் என்றும் கூறப்பட்டது.

விசாரணையின் பின் தற்கொலை எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. (க)

## பனிப்புலம் துப்பாக்கிச்சூடு இன்று சந்தேகநபர்கள் ஆஜர்

பண்டத்தரிப்பு, செவ்.

பனிப்புலம் துப்பாககிச்சூடு சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருக்கும் நான்கு சந்தேக நபர்களும் நாளை மல்லாகம் மாவட்ட நீதவான் எம். டி. ஜேசுரத்தினம் முன்னிலையில் ஆஜர் செய்யப்படுவார்கள்.

கடந்த பொதுத்தேர்தலின் போது தேர்தலில் வாக்களிக்காது பகிஷ்கரிக்கவேண்டும் என்ற கொள்கையுடைய அரசியல் கோஷ்டி ஒன்று பனிப்புலத்தில் பிரசாரக்கூட்டம் நடாத்த முற்பட்டபோது ஏற்பட்ட குழப்பத்தைத் தொடர்ந்து துப்பாக்கிப்பிரயோகம் நடைபெற்றதாகவும் அதில் சின்னையா பூலோகம் என்பவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக, சங்கானைப் பொலிசார், யோகேஸ்வரன், தேவராசா, நடேசன், ரவீந்திரன் என்னும் நான்கு சந்தேக நபர்களைக் கைதுசெய்து மல்லாகம் நீதவான் முன்னிலையில் ஆஜர்செய்தனர். சந்தேக நபர்களை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டு இன்று புதன் மீண்டும் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக சுப்பிரமணியம் என்பவரைப் பொலிசார் தேடிவருகின்றனர். சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி மு திருநாவுக்கரசு ஆஜராவார். (இ)

## அமைச்சரின் கோரிக்கை

கொழும்பு, செவ்

வெற்றிக் கொண்டாட்டங்களுக்காக பொது வாகனங்களை பாவிப்பதை கைவிடுமாறு போக்குவரத்து அமைச்சர் திரு எம். எம். முகமட் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மகிழ்ச்சியின் உச்சக்கட்டத்தில் மக்கள், பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவித்து வருகிறார்கள் என்றும், இப்படியான நடவடிக்கைகளை கைவிடுமாறு பணிவான வேண்டுகோள் விடுவதாகவும் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 27ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka

## நீதித்துறையின் சுதந்திரம் பாதுகாக்கப்படும்

### நீதி அமைச்சர் கூறுகின்றார்

கொழும்பு, செவ்

நீதித்துறையின்சுதந்திரம் பாதுகாக்கப்படுவதோடு அதில் பல மாற்றங்களும் செய்யப்படவுள்ளது என்று நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் தெரிவித்துள்ளார்.

வழக்கறிஞர் சங்கம், நீதியரசர்கள், அரச தரப்பு வழக்கறிஞர் ஆகியோருடன் ஆலோசனை நடத்தியபின்னரே நீதித்துறையில் மாற்றம் செய்யப்படும் என்றும் அவர் கூறினர்.

நீதி விசாரணைச் சட்டம், நீதி விசாரணைக் கமிஷன் சட்டம் ஆகியவற்றிலும் மாற்றங்கள் செய்யப்படும் என்றும் திரு. தேவநாயகம் கூறினர்,

"கடந்தஅரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் நீதி சேவையில் உயர் அதிகாரிகளின் குறுக்கீடுகளும் கட்டுப்பாடுகளும் இருந்து வந்துள்ளது. இதன் காரணமாக நீதிசேவையின் சுதந்திரம் பாதிக்கப்பட்டிருந்தது" என்றுகூறிய அமைச்சர் தமது பாவிக்காலத்தில் இவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றும் அவர் கூறினர்.

### எனது...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளார்.

தனது காதலனுக்கு வேறு இடத்தில் திருமணம் செய்து வைக்க முயற்சி நடப்பதாகத் தெரிய வருவதாகவும் அதை எப்படியாவது தடுத்துத் தம்முடன் அவரைச்சேர்த்து வைக்குமாறும் அவர் பொலிசாரை வேண்டியுள்ளார்

இதுதொடர்பாக சங்கானைப் பொலிசார் விசாரணையில் ஈடுபட்டுள்ளார்கள் (அ)

### எனது வாக்குகளும் தமிழீழத்துக்கே!

நெல்லியடி, செவ்.

"நடந்து முடிந்த தேர்தலில் எனக்குக்கிடைத்த வாக்குகளையும் தமிழ்ஈழ விடுதலைக்கானவாக்குகளாகக் கணித்துக்கொள்ளுமாறு தமிழர்விடுதலைக் கூட்டணியினரைக் கேட்டுக் கொள்கிறேன்',

இவ்வாறு கடந்த தேர்தலில் பருத்தித்துறைத் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்ட திரு. மு. பொ. வீரவாகு வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரமொன்றில் குறிப்பிட்டுள்ளார்,

தமிழ்ஈழ விடுதலைக்காகப் பருத்தித்துறைத் தொகுதி மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிக்குத் தமது ஆசிகளைத் தெரிவித்துக் கொள்ளுவதாகவும் அப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திரு. வீரவாகுவுக்குக் கடந்த தேர்தலில் 3065 வாக்குகளும் கூட்டணியில் போட்டியிட்டு வெற்றியீட்டிய திரு. க துரைரத்தினத்திற்கு 12,989 வாக்குகளும் கிடைத்தன

### இன்று!

அரியாலை புதன்

யாழ்ப்பாணம் புனிதபத்திரிசியார் கல்லூரி முத்தமிழ் மன்றம் நடாத்தும் முத்தமிழ் விழா இன்று மேத்பா கல்லூரியின் மத்தியூஸ் மண்டபத்தில் மாலைநடைபெறும்.

இவ்விழாவிற்கு அருட்திரு சே தனிநாயகம் அடிகளார் தலைமை வகிப்பார்கள்.

### பொதுத்தேர்தலில் வாக்களித்தவர்கள்

கொழும்பு, செவ்

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் 57 லட்சத்து 69 ஆயிரத்து 706 பேர் தமது வாக்குகளை அளித்துள்ளனர்.

மொத்த வாக்காளர்கள் தொகை 66, 17, 699 பேர்கள் ஆகும் இவர்களில் 87.2 வீதம் இம்முறை வாக்களித்தனர்

கடந்த 70-ம் ஆண்டு தேர்தலில்வாக்களித்தோரைவிட இம்முறை 2 சதவீதமானோர் கூடுதலாக வாக்களித்துள்ளனர். (இ)

### புலவர் —

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### இம்சை பற்றி விசாரணை

சிறையில் 'மிசா' கைதிகள் இம்சைப்படுத்தப்பட்டது தொடர்பாக இஸ்மாயில் கமிஷன் முன்னிலையில் இன்று முன்னைநாள் சிறை அதிகாரி திரு. வித்தியாசாகர் சாட்சியமளித்தார்.

மிசா கைதிகளை சிறைக்குள் அனுப்புவதற்காக குறைந்த பட்சபலவந்தம் பிரயோகிக்கப்பட்டதாகவும் இது சட்டத்திற்கு அமையவே செய்யப்பட்டதென்றும் அவர் கூறினர்.

எவரையும் தாம் துன்புறுத்தும்படி உத்தரவிடவில்லையென்றும் அரசுஅதிகாரிகளிடமிருந்தோ வேறு உயர்மட்டத்திலிருந்தோ அவர்களைத்துன்புறுத்தும்படி தமக்கு உத்தரவு வரவில்லையென்றும் அவர் சொன்னர்.

தமக்கு அரசியல் நோக்கம் கிடையாது என்றும், எந்தக் கைதி மீதும் தமக்கு தனிப்பட்ட குரோதம் கிடையாது என்றும் அவர் சொன்னர்.

### வர்த்தகர்களுக்கு பாதுகாப்பு

கொழும்பு, செவ்.

அரசாங்கம் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதால் வர்த்தகர்கள் தடையின்றி பாவனைப் பொருட்களை நாட்டின் சகல பகுதிகளிலும் விநியோகம் செய்யலாம் என்று இலங்கை வர்த்தகர் சம்மேளனம் வர்த்தகர்களுக்கு அறிவித்துள்ளது.

எந்தவித அச்சமுமின்றி கடைகளைத் திறந்துவைத்து வியாபாரம் செய்யலாம் என்றும் இடத்துக்கு இடம் பொருட்களை எடுத்துச் செல்ல எதுவித தடையும் இல்லை என்றும் வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது. (இ)

## ஊரடங்குச் சட்டம் ரத்து தொடர்ந்து தீவிர பாதுகாப்பு

கொழும்பு, செவ்.

கண்டி, கேகாலை, மாத்தளை ஆகிய மாவட்டங்களிலும் நித்தம்புவ, திவுலுப்பிட்டிய, மினுவாங்கொட, மஹியங்கனை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் அமுல் செய்யப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஞாயிறன்று அமுல் செய்யப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் ஏற்கனவே ரத்துச் செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே.

ஊரடங்குச் சட்டம் ரத்துச் செய்யப்பட்டபோதிலும் வன்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்குறிப்பிட்ட இடங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

செங்கலடி நிலைமை குறித்து திரு. கதிரவேலுப்பிள்ளை பிரதமர் ஜே. ஆருடன் இன்று தொடர்புகொண்டு பேசினர்

### இன்று கண்டியில்

## பிரதமர் ஜே. ஆருக்கு பெரு வரவேற்பு

(கண்டி)

இன்று கண்டிக்கு விஜயம் செய்யும் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்குமகத்தான வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

காலை பத்துமணிக்கு ஸ்ரீசெல்வவிநாயகர் ஆலயத்தில் பிரதமருக்கு சமயரீதியில் வரவேற்பளிக்கப்படும். தொடர்ந்து அவர்ஊர்வலமாக ஜனதிபதி மாளிகைக்கு அழைத்துச் செல்லப்படுவார். இவ்வரவேற்பில் கண்டி அரசாங்க அதிபரும் மற்றும் முக்கியஸ்தர்களும் கலந்துகொள்வர்.

(5-ம் பக்கம் பார்க்க)